# பெரிய வெங்காயத்தின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை

எதிர்வரும் பண்டிகை காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையை குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வர்த்தக அமைச்சு நேற்று நடவடிக்கை எடுத்துள்ளது. பண்டிகை காலத்தில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவது தொடர்பில் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கும் வர்த்தக அமைச்சருக்கும் இடையில் கலந்துரையாடல் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில், இறக்குமதியாளர்கள்தங்களுடைய கையிருப்பிலுள்ளபெரிய வெங்காயத்தை 450 ரூபா மற்றும் 500 ரூபாவிற்கு இடையில் விற்பனை செய்ய இணக்கம் தெரிவித்துள்ளனர். அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன், போட்டி விலையில் தமது பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இதேவேளை பெரிய வெங்காய இறக்குமதிக்கு பாகிஸ்தான் அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். எனினும், ஒல்லாந்து மற்றும் துருக்கி ஆகிய பிற நாடுகளில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதோடு, கையிருப்பிலுள்ள வெங்காயத்தை பண்டிகைக் காலங்களில் குறைந்த விலையில் வழங்க தயாராக உள்ளதாக இறக்குமதியாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழ்-சென்னை பல்கலைக்கழக மாணவர்களுக்கு அமெரிக்க மத்திய நிலையம் நடத்திய ஊடக செயலமர்வு



யாழ்ப்பாண அமெரிக்க மத்திய நிலையம், சென்னை அமெரிக்க மத்திய நிலையத்துடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை சென்னையிலுள்ள மாணவர்களுடன் மெய்நிகர் நிலையில் இணைத்து ஒரு ஊடக எழுத்தறிவு தொடர்பான செயலமர்வினை கடந்த 15ஆம் திகதி நடத்தியது.

ஊடகப் பயிற்றுவிப்பாளரும் Yourstory Tamil இன் ஆசிரியருமான இந்துஜா ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில், இன்றைய சிக்கலான ஊடகத் தளத்தில் பயணிப்பதற்கு இன்றியமையாத திறன்களான போலிச் செய்திகளைக் கண்டறிதல், விமர்சன ரீதியாக சிந்தனை செய்தல், பக்கச்சார்புகளை இனங்காணுதல் மற்றும் உண்மைகளைப் பரிசீலிக்கும் அடிப்படை நுட்பங்களில் தேர்ச்சியடைதல் போன்ற விடயங்களில் 22 இலங்கை மற்றும் தென்னிந்திய மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக்ளஸ் சொனெக், கிழக்கு மற்றும் வட மாகாணங்களுக்கானதனது ஐந்து நாள் விஜயத்தின் போது, தவறான தகவல்கள் கரைபுரண்டோடும் ஒரு உலகில், போலிச் செய்திகளிலிருந்து உண்மையைப் புரிந்துகொண்டு பிரித்தறிவதென்பது முன்னெப்போதையும் விட மிகமுக்கியமானது'' என பிரதித் தூதுவர் சொனெக் குறிப்பிட்டார். எல்லை தாண்டிய அறிவுப் பரிமாற்றத்தைப் பேணிவளர்ப்பதிலும், இளைஞர்களிடையே ஊடகப் புரிதலை மேம்படுத்துவதிலும் இச்செயலமர்வின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர் ''ஊடக எழுத்தறிவு தொர்பான பயிற்சியை அமெரிக்கா ஆதரிக்கிறது, ஏனெனில் இது சிக்கலான தகவல்தளத்தில் பயணிப்பதற்கும், தகவலறிந்த குடிமக்களை போஷிப்பதற்கும் ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்துவதற்கும் இன்றியமையாத திறன்களை தனிநபர்களுக்கு வழங்குகிறது எனவும் தெரிவித்தார்.

## யானை தாக்கி விவசாயி பலி

**அநுராதபுரம் நிருபர்**

காட்டுயானையின் தாக்குதலில் விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். மதவாச்சி பொலிஸ் பிரிவின் லிந்தவெவ பகுதியில் 14 ஆம் திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்தவெவ, மதவாச்சி பகுதியை வசிப்பிடமாக கொண்ட 61 வயதுடைய விவசாயி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

## விடுதலை செய்யப்பட்ட சட்டத்தரணி!

கொழும்பு மேல் வர்த்தக நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை நிறைவேற்றும் வேளையில், சட்டத்தரணியின் நெறிமுறைகளை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த சட்டத்தரணி ஒருவரை விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது. கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று 2022 ஆம் ஆண்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ரஷ்ய Aeroflot விமானம் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவை கையளித்த சட்டத்தரணி, சட்டத்தரணிகளின் நெறிமுறைகளை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் பிரிதி பத்மன் சூரசேன தலைமையிலான உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த தீர்ப்பை வழங்கியது. இந்தச் சம்பவத்தில் பிரதிவாதி சட்டத்தரணி, சட்டத்தரணியின் நெறிமுறைகளை மீறியதாக தெரியவராததால், அந்த குற்றச்சாட்டில் இருந்து பிரதிவாதி சட்டத்தரணி விடுவிக்கப்பட்டதாகவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "வேள்வித் திருமகன்'' திருப்பாடுகளின் நாடகம்

## 21ஆம் திகதி ஆரம்பமாகிறது

திருமறைக் கலாமன்றத்தால் அரைநூற்றாண்டைக்கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரிய சேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே 'வேள்வித் திருமகன்'. மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக்கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வழமை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் 'வேள்வித் திருமகன்,' அரங்கேறத் தயாராகின்றது.


KELANI CABLES
Safety Forever...

**Sales Promotion Officer**
**சேல்ஸ் புரோமோசன் அலுவலர் தேவை (வடபிராந்தியம்)**

**தகைமைகள்**

- க.பொ.த (உ/த) குறைந்தது 3 பாடங்களில் திறமைச் சித்தி
- 01 வருடத்துக்கு மேலான விற்பனை அனுபவம்
- சிறப்பான ஆளுமைத் திறன்
- இலக்குகளை அடையக்கூடிய ஆற்றல்

ஆர்வமுள்ளவர்கள் 07 நாட்களுக்குள் சுய விபரக்கோவையை hr@kelanicables.com மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

மின்னஞ்சல் சப்ஜெக்ட்டில் "Sales Promotion Officer" எனக்குறிப்பிடவும்

குழும பொது முகாமையாளர் - மனிதவளம்
**Kelani Cables PLC**
P.O.Box 14, Wewalduwa,
Kelaniya



DLB DEVELOPMENT LOTTERIES அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள் 2024.03.14 - வியாழக்கிழமை

ராசி அதிர்ஷ்டம் — சீட்டிழுப்பு திகதி 2024.03.14 | வெற்றி வாரம் 4105 | வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 04 05 11 37 | கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் : Rs. 11,514,752.80

ADA KOTIPATHI — திகதி 2024.03.14 | வெற்றி வாரம் 2219 | வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள்: 26 38 45 60 | ஆங்கில எழுத்து R
அடுத்த சுப்பர் ஜக்பொட் : Rs. 98,861,062.40

கப்ருக — திகதி 14.03.2024 | வெற்றி வாரம் 1569 | வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: W 03 01 10 45 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 511,824,682.20

சுபிரி தன சம்பத — திகதி 14.03.2024 | வெற்றி வாரம் 127 | வர்ணம் மஞ்சள்
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இல்க்கம்: R 3 0 2 4 2 3 | M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,132,716.00

சனிதா Shanida — திகதி 2024.03.14 | வெற்றி வாரம் 4554 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 23 25 50 60 | ஆங்கில எழுத்து O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,967,350.40

SUPER BALL சுப்பர் போல் — சீட்டிழுப்பு திகதி 2024.03.14 | வெற்றி வாரம் 2393 | வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 26 51 64 74 | ஆங்கில எழுத்து C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,175,945.60

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## ரமழான் சிந்தனை 06



## துஆ இறைஞ்சுவோம்

அடியான் தனது தேவைகளை தன்னிடம் கேட்பதை அல்லாஹ்தஆலா விரும்புகின்றான். அல்லாஹ்தஆலாவுக்கும் அடியானுக்கும் நெருக்கமான தொடர்பு துஆ மூலம் ஏற்படுகின்றது.

உங்கள் இறைவன் கூறுகின்றான். என்னிடம் இறைஞ்சுங்கள் நான் உங்கள் இறைஞ்சுதலை ஏற்றுக்கொள்வேன் (40:60) எல்லாம் வல்ல நாயன் எமது துஆக்களை ஏற்றுக் கொண்டு அருள் பாலிப்பானாக. ஆமீன்.

**ஸஹர் முடிவு நேரம் : 04.48**

**நோன்பு திறக்கும் நேரம் : 06.22**

**எம்.எம்.எம். ரம்ஸீன் கெலிஓயா**


# Invitation for Bids (IFB)
## Democratic Socialist Republic of Sri Lanka
## Chavakachcheri Pradeshiya Sabha
## Northern Province

**Bidding Documents for Supply of 900 Nos of LED Bulb(30W) and 200 Nos of Light Control Sensor for Street Lamp**

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of **Chavakachcheri Pradeshiya Sabha**, Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for supply of LED Bulb(30W) and Light Control Sensor for Street Lamp in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedures.
3. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **15th March 2024** to **04th April 2024** from **Secretary, Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam** and inspect the bidding documents at the same place on the above time
**TP: -021 205 0356, 021 205 0348**
**Fax: 021 205 0348**
4. Qualification requirements are include possessing the minimum 3 years experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document in English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Chavakachcheri Pradeshiya Sabha, A9 road, Kodikamam** from **15th March 2024** to **04th April 2024** from **09.00 hrs** to 1**5.00 hrs** on public working days and upon payment of non-refundable fee of **Rs 2,000.00**. The method of payment should be by cash
6. Complete bids should be forward in two copies as original and duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Secretary, Chavakachcheri Pradeshiya Sabha, A9 road, Kodikamam** on or before **05th April 2024** at **10.00AM**. Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
7. The Pre-Bid meeting will be held at **Chavakachcheri Pradeshiya Sabha,Kodikamam** on **25th March 2024 at 14.00 hrs,** Interested Bidders may participate in this meeting their own expenses.
8. The validity period of Bid should be **49** days from the last date of bid submission. The Bid security shall be an Unconditional and on demand bank guarantee valid up to **20th of June 2024**
9. All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.
10. Selected suppliers should be distributed the Suitable Goods above mentioned address of **Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam.**

| Ser. No | Bid No | Description | Period of Contract and Amount | Bid validity period from date of opening | Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required period |
| 1 | **NP/14/41(6)Acc /Purchase/2024** | Supply of 900 Nos of LED Bulb(30W) and 200 Nos of Light Control Sensor for Street Lamp | 1 month (2 Mn) | 49 Days | 20,000.00 | 20.06.2024 |

**Chairman,**
**Local Autourity Procurement Committee,**
**Chavakachcheri Pradeshiya Sabha,**
**A9 Road, Kodikamam.**

**15.03.2024**